கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி

சட்ட மன்றத் தொகுதி கிளை, வார்டு கழக செயலாளர்கள் - வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம்

மாவட்டக் கழக செயலாளர், அமைச்சர் சி.வெ.கணேசன் அறிக்கை!

கடலூர், நவ.3-

கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ. கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கழகத் தலைவர், தமிழ் நாடு முதலமைச்சர், அண்ணன் தளபதி அவர்களின் ஆணையின்படியும், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டுதலின்படியும், கடலூர் மேற்கு மாவட்டம் , திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, ஆகிய சட்ட மன்ற தொகுதிகளின் கிளை, வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) ஆலோசனைக் கூட்டம் கீழ்க்கண்ட அட்டவணையின்படி நடைபெற உள்ளது.

திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நாள்: 04.11.2024 திங்கள் கிழமை, காலை: 10. மணி. இடம் : இராமலிங்கம் அஞ்சுகம் திருமண மண்டபம், திட்டக்குடி

பண்ருட்டி சட்டமன்றத் தொகுதி நாள்: 04.11.2024 திங்கள் கிழமை, மாலை: 3.30 மணி. இடம்: K.S.R. சக்கரபாணி செட்டியார் திருமண மண்டபம், பண்ருட்டி

விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி

05.11.2024. செவ்வாய் கிழமை காலை: 10 மணி. இடம் : சிவ பூஜா திருமண மண்டபம், விருத்தாசலம்.

நெய்வேலி சட்டமன்றத் தொகுதி 05.11.2024. செவ்வாய் கிழமை மாலை: 3.30 மணி. இடம்: K.N.T. மஹால், ஆர்ச் கேட், நெய்வேலி

அதுசமயம். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (BLA2) அனைவரும் சம்பந்தப்பட்ட தொகுதி கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளவேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

ஈரோடு தெற்கு

மாவட்டக் கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து மறைவு!

அமைச்சர் சு.முத்துசாமி - கழகத்தினர் நேரில் அஞ்சலி !

ஈரோடு, நவ.3-

ஈரோடு தெற்கு மாவட்ட கழக முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் முல்லை க.முத்து வயது78, நேற்று முன்தினம் (1.11.2024 - வெள்ளிக்கிழமை) இரவு 9.30 மணியளவில் வயது மூப்பின் காரணமாக அவரது இல்லத்தில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.

அன்னாருக்கு குமார், முருகேசன் என இரு மகன்களும் அனிதா என்கிற ஒரு மகளும் உள்ளனர்.

அன்னாரின் மறைவு செய்தியறிந்த ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் அமைச்சருமான சு.முத்துசாமி உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, நகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரது உடல் நேற்று (2.11.2024-சனிக்கிழமை) மதியம் 12 மணியளவில் ஈரோடு காவிரி கரையில் உள்ள ஆத்மாவில் தகனம் செய்யப்பட்டது.

உடல் நலம் குன்றிய கோலியனூர் கிழக்கு ஒன்றியம் நரையூர் கிளைக் கழக பிரதிநிதி மனோகரை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி சந்தித்து உடல் நலம் விசாரித்து ஆறுதல் கூறினார். மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய செயலாளர் பி.தெய்வசிகாமணி, கல்பட்டு வி.ராஜா, பேரூர் பா.ஜீவா, ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயபால் , தகவல் தொழில்நுட்ப அணி அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

நாகை மாவட்டத்தில்

சட்டமன்றத் தொகுதிகள் வாரியாக வாக்குச் சாவடி முகவர்கள் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் அறிவிப்பு!

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் வழிக்காட்டு தலோடு நாகை மாவட்ட பொறுப்பு அமைச்சர் தமிழ்நாடு அரசு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அறிவுத்தலின்படி நாகை மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகள் வாரியாக வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) ஆலோசனைக்கூட்டம் நாகை மாவட்ட கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் உ.மதிவாணன், இரா.சங்கர், வி.ஜெயபிரகாஷ் ஆகியோர் முன்னிலையில் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

நாள்	நேரம்	ஒன்றிய, நகர, பேரூர்	இடம்
03.11.2024	காலை 10.00 மணி	நாகை நகரம்	நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகம்
03.11.2024	காலை 11.30 மணி	நாகை வடக்கு ஒன்றியம்	நாகை மாவட்ட தி.மு.க. அலுவலகம்
03.11.2024	மாலை 4.00 மணி	நாகூர் நகரம்	நாகூர் நகர தி.மு.க. அலுவலகம்
03.11.2024	மாலை 5.00 மணி	திருமருகல் வடக்கு ஒன்றியம், திட்டச்சேரி பேரூர்	திருமருகல் வடக்கு ஒன்றிய தி.மு.க.அலுவலகம்.
05.11.2024	காலை 8.00 மணி	திருமருகல் தெற்கு ஒன்றியம்	திருக்கண்ணபுரம்
05.11.2024	காலை 10.00 மணி	கீழ்வேளூர் வடக்கு - தெற்கு ஒன்றியம், மற்றும் கீழ்வேளூர் பேரூர்	கீழ்வேளூர் ஒன்றிய தி.மு.க. அலுவலகம் கீழ்வேளூர்
05.11.2024	காலை 11.00 மணி	கீழையூர் மேற்கு ஒன்றியம்	கடைத்தெரு திருக்குவளை
05.11.2024	மதியம் 3.00 மணி	நாகை தெற்கு ஒன்றியம்	நாகை தெற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகம்
05.11.2024	மாலை 5.00 மணி	கீழையூர் கிழக்கு ஒன்றியம் & வேளாங்கண்ணி பேரூர்	கலைஞர் அரங்கம், மெயின்ரோடு வேளாங்கண்ணி
06.11.2024	காலை 10.00 மணி	வேதாரண்யம் நகரம்	வேதாரண்யம் நகர தி.மு.க. அலுவலகம்
06.11.2024	காலை 11.00 மணி	வேதாரண்யம் கிழக்கு ஒன்றியம்	திரௌபதி அம்மன் கோவில் அருகில் அண்டர்காடு
06.11.2024	மதியம் 3.00 மணி	வேதாரண்யம் மேற்கு ஒன்றியம்	வேதாரண்யம் மேற்கு ஒன்றிய தி.மு.க. அலுவலகம் அருகாமையில்
06.11.2024	மாலை 5.00 மணி	தலைஞாயிறு ஒன்றியம் மற்றும் தலைஞாயிறு பேரூர்	தலைஞாயிறு ஒன்றிய தி.மு.க. அலுவலகம்

என்.கௌதமன்
செயலாளர்
நாகை மாவட்ட தி.மு.க.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில்

எழும்பூர் சட்டமன்றத் தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம்!

தொகுதி பொறுப்பாளர் பி.எம்.யாழினி சிறப்புரை!

சென்னை, நவ. 3

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் வடக்கு, தெற்கு பகுதி கழக செயலாளர்கள் சொ.வேலு, வி.சுதாகர் ஆகியோர் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:

சென்னை கிழக்கு மாவட்டம் ,எழும்பூர் சட்டமன்ற தொகுதி கலந்தாலோசனைக் கூட்டம் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் இன்று (3.11.2024 - ஞாயிற்றுக் கிழமை) சச்சிதானந்தம் தெரு, சமூக நலக்கூடத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்திற்கு தயாநிதி மாறன் எம்.பி., மேயர் பிரியாராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத்தலைவர் கோ. ஏகப்பன், சட்டத்துறை இணைச் செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மணிமுடி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், மாவட்ட துணை செயலாளர் புனிதவதி எத்திராசன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி, அ.நிர்மலா தேவி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கூட்டத்தில் தொகுதி பொறுப்பாளர் பி.எம். யாழினி ஆலோசனை வழங்க உள்ளார்.

எனவே சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் வடக்கு, தெற்கு பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், பகமுகவர்கள், BLC உறுப்பினர்கள் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டு கொள்கிறோம்.

இவ்வாறு பகுதிச் செயலாளர்கள் சொ.வேலு,வி. சுதாகர் அறிவிப்பில் தெரிவித்துள்ளனர்.

தீபாவளியை முன்னிட்டு புதுக்கோட்டை மாலையீடு டோல்கேட்டில் இளைஞர் நற்பணி மன்றமும் ஊரார்களும் இணைந்து நடத்திய 44ஆம் ஆண்டு மாபெரும் வெற்றிக் கோப்பைக்கான சைக்கிள் போட்டியினை மாமன்ற உறுப்பினர் காதர்கனி மற்றும் வட்டக் கழக செயலாளர் மாலையீடு பிரபு ஆகியோர் ஏற்பாட்டில் மாநகர செயலாளர் ஆ.செந்தில் தொடங்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பை மற்றும் ரொக்க பரிசு வழங்கினார். உடன் மாமன்ற உறுப்பினர் பால்ராஜ், கழக நிர்வாகிகள் தனபால், கம்பன் நகர் ரமேஷ், வெற்றிச்செல்வம், சேக்கத்தா, தங்கதுரை, செல்வம், செல்லையா, பாரதிதாசன் ,சரவணன், பத்மநாபன், நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் கே.என். ஞானவேல் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டம் –

சட்டமன்றத் தொகுதி வாரியாக BLA2 உட்பட நிர்வாகிகள் கூட்டம்!

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க BLA 2 மற்றும் பூத் கமிட்டியை சரிபார்க்கும் பணியை மேற்கொள்ள முதற்கட்டமாக நாமக்கல் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாமக்கல், சேந்தமங்கலம், இராசிபுரம் ஆகிய 3 சட்டமன்றத் தொகுதிகளில் கீழ்க்கண்ட விவரப்படி BLA 2 உட்பட நிர்வாகிகள் கூட்டம் நடைபெறுகின்றது. இக்கூட்டத்தில் சட்டமன்ற தொகுதி உறுப்பினர்கள், மாவட்ட தலைமைக்கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், கிளைச் செயலாளர்கள், BLA 2, வார்டு செயலாளர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள், வார்டு கிளை கழக பிரதிநிதிகள், கழகத்தின் முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோர் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இத்தொகுதி கூட்டத்தில் தலைமைக் கழகத்தின் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள தேர்தல் மேற்பார்வையாளர்கள் பங்கு பெறுகிறார்கள்.

பொருள் : தலைமைக்கழக அறிவிப்பின்படி தொகுதி தேர்தல் பார்வையாளர்கள், நகர, ஒன்றிய, பேரூர் வாரியாக BLA 2 மற்றும் BLC ஆய்வு கூட்டங்கள் ஊராட்சி, வார்டு வாரியாக கூட்டம் நடத்துவது சம்பந்தமாக

05.11.2024 நிகழ்ச்சி விவரங்கள்

நேரம்	இடம்	தொகுதி பார்வையாளர்கள்
08.30 AM	ஜஸ்வர்யா மஹால், சேந்தமங்கலம். (சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி)	திருமதி. ஜே.ரேகா பிரியதர்ஷினி, மாநில மகளிர் தொண்டர் அணி துணைச் செயலாளர்.
11.00 AM	சுமங்கலி மஹால், லைன்ஸ் கிளப், இராசிபுரம். (இராசிபுரம் சட்டமன்ற தொகுதி)	நன்னியூர் ராஜேந்திரன், மாநில நெசவாளர் அணி தலைவர்.
12.30 PM	நளா ஹோட்டல் , திருச்சி ரோடு, நாமக்கல். (நாமக்கல் சட்டமன்ற தொகுதி)	திருமதி. முனைவர் ஜான், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர்.

கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி.,
நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர்,
தலைவர், நாமக்கல் மாவட்டமத்திய கூட்டுறவு வங்கி.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

வளவனூர் எ. கிருஷ்ணமூர்த்தி
நவம்பர் 3 (2012)



இளம் வயது முதலே கழகக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு, தமது பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

விழுப்புரம் வட்டக் கழகச் செயலாளராகவும் – பல ஆண்டுகள் வளவனூர் பேரூர்க் கழகச் செயலாளராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

மொப்போர் தியாகியான இவர், 1953–ல் மும்முனைப் போராட்டம் முதல் விலைவாசி உயர்வு எதிர்ப்பு ஆர்ப்பாட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், ஈழத் தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு ஏறக்குறைய 368 நாட்கள் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.